15.07.2026

**அ.வ.எண். 244 / 2019**

வா.த.சா. –2

பெயர் : – பாண்டி

<u>**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனது சொந்த ஊர் சின்னகவுண்டன்பட்டியாகும். குடியிருப்பது எம்.வாடிப்பட்டி ஆகும். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனக்கு வாதியை சுமார் 10, 20 வருடங்களாக தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர். நான் வாதியுடன் வரவு செலவு செய்தது கிடையாது. 2018ம் ஆண்டு கால கட்டத்தில் வாதி அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக இருந்தார். அவர் வேறு தொழில் செய்தது கிடையாது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடம் விஷயமாக கேட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியும். விஸ்தீரணமும் தெரியும். நான்குமால் தெரியுமா என்றால் ஒரு பக்கம் மெயின்ரோடு உள்ளது. ஒரு பக்கம் வீதி உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண். 933/2 C–யாகும். பிரதிவாதியிடம் வாதி 12.02.2018ம்தேதி கிரையம் கேட்டார். அதற்கு ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்கள். அந்த ஒப்பந்தம் 3 பக்கங்கள் கொண்டதாகும். அந்த ஒப்பந்தத்தை எழுதியவர் சுப்பையா ஆவார். முத்திரைத்தாளில் எழுதினார்கள். அது எவ்வளவு ரூபாய் பத்திர காகிதம் என்று எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ–1 ஆவணத்தை ஆவண எழுத்தர்தான் எழுதினார். வா.சா.ஆ–1 ஆவணத்தை எதற்காக பதிவு செய்யப்படவில்லை என்று காரணம் அதில் எழுதப்படவில்லை. என்ன காரணத்திற்காக கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்டதாகும். வா.சா.ஆ–1 ஒப்பந்தத்தில் நான் வாதி, பிரதிவாதி கருப்பு கலர் பேனாவால் கையெழுத்து செய்தோம்.

பிரதிவாதிக்கு வாதி ரூபாய் ஒருலட்சம் முன்பணம் ரொக்கமாக கொடுத்தார். நான் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தை கிரையம் எழுதிக்கொடுக்குமாறு நேரடியாக கேட்டேன். எந்த தேதியில் யார் முன்னிலையில் கேட்டேன் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று எனக்கு நேரடியாக தெரியாது. பிளான் அப்ரூவல் எப்படி வாங்க வேண்டும் என்ற விபரம் வாதிக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்திற்கு முத்திரைத்தாள் வாதி பெயரில் வாங்கப்பட்டது. பாக்கி கிரையத்தொகையை வாதி தன் கையிருப்பில் வைத்துள்ளாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு பிரச்சனை சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு வெளியே பஞ்சாயத்து எதுவும் பேசவில்லை. இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கிடையாது. வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்தத்தில் 2 ஆவதாக சாட்சி கையெழுத்து போட்டவர் ஜோசப் சேகர் ஆவார். அவர் வாதியின் உறவினர் அல்ல. நானும் ஜோசப் சேகரும் மற்றும் வாதியும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறோமா என்றால் நானும் ஜோசப் சேகரும் செய்கிறோம். வாதியிடம் பிரதிவாதி ரூபாய் ஒருலட்சம் கடனாக வாங்கினார் என்றும், அப்போது வாதி கேட்டுககொண்டதற்கிணங்க பிரதிவாதி எழுதப்படாத முத்திரைத்தாள் மற்றும் பச்சை பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும், அதை வைத்து தாவா கிரைய ஒப்பந்தத்தை மோசடியாக உருவாக்கி வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் நண்பர்கள் அல்ல. நானும் வாதியும் நண்பர்கள் என்றும், பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்று சொல்லி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.15 17:44:58 +0530

Principal District Judge,
Dindigul.